**காலநிலைக்கேற்ற துரித நீர்ப்பாசன கமத்தொழில் செயற்றிட்டம் - 2019**

கால நிலைக்கேற்ற துரித நீர்ப்பாசன கமத்தொழில் செயற்திட்டத்தின் அலுவல்களது 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையேயான 2019 ஏப்ரல் 11 ஆந் திகதிய 6346-LK இலக்க பண அளிப்பு மற்றும் நிதிசார் தகவல் கடிதம் மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கையின் 111(ii) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின்கீழ், மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சு நிறைவேற்று முகவராகும். செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் சர்வதேச அபிவிருத்திச் சங்கமாகும். தெரிவு செய்யப்பட்ட வறண்ட பிரசேங்களில் சிறு பற்றுநிலக் கமத்தொழிலின் உற்பத்தித் திறனையும் காலநிலை எழுச்சியையும் முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,200 க்கு மில்லியனுக்கு நிகரான 140 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். அதில் ரூபா 22,500 மில்லியனுக்கு நிகரான 125 மில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடாகியது. மீதித் தொகையான ரூபா 2,700 மில்லியனுக்கு நிகராண 15 மில்லியன் இலங்கை அரசாங்கத்தாலும் நலனாளிகளாலும் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2019 மே 07 அன்று ஆரம்பமாகிய செயற்திட்டம் 2024 யூன் 30 ஆந் திகதி நிறைவடையவுள்ளது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களை தவிர, 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புகள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து உண்மையாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவது எனது குறிக்கோளாகும். உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உயர் மட்ட உறுதிப்பாடென்றபோதும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வு பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றை எப்போதும் வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக் கூடுமென்பதால் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தப்படக் கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருட்படுத்தக் கூடியனவாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிப் பயன்பாடு தொடர்பான கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருட்படுத்தக்கூடிய ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவிலும் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயபூர்வத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று பிரதிநிதித்துவப்படுத்துகின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின்போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய

முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுடன் நான் தொடர்பு கொள்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வ விடயங்கள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வேலையில் ஈடுபடுத்துவதற்கான முற்பணமாக 17 ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 68,771,682 மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | செலவினம் அதிகரித்துக் கூறப்படுதல் | ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணமானது மீளாய்வாண்டின் அபிவிருத்திச் செலவினமாக வரவு வைக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவினம் மாத்திரமே கணக்கிலிடப்பட வேண்டும். நிதிக் கூற்றுக்களில் முற்பணமானது வெவ்வேறாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பாய்வு ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்டக் காலப்பகுதியின்போது ரூபா 900 மில்லியனுக்கு நிகரான 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இரு உறுப்புகளிலிருந்தும் நலன்பெறுநர் பங்களிப்பாக செயற்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 27,699,100 மில்லியன் மாத்திரமே நலன்பெறுநர்களது பங்களிப்பாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதனைக் கணக்காய்வில் சரி, பிழை பார்ப்பதற்கான கணிப்பீட்டு முறை, பங்களிப்பு விதம் இரு வெவ்வேறு உறுப்புகளுக்கும் ஒவ்வொரு நலனாளியிடமிருந்தும் பெறப்பட்ட பங்களிப்பு விதம் மற்றும் தொகை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | தவறான கணிப்பீட்டின் காரணமாக நலனாளிகளின் பங்களிப்புப் பெறுமதி அதிகரித்து/குறைத்துக் காட்டப்படுதல். | அவதானிப்புடன் இணங்குகின்றோம். | நலனாளிகளது பங்களிப்பானது விவசாயிகளினது உள்ளவாறான பங்களிப்பின் அடிப்படையில் அமைய வேண்டும். அது நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 2.2 விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | செயற்திட்ட வழிநாடாத்தல் குழுவின் (PSC) 02 மாதங்களுக்கு ஒரு முறை நடைபெற வேண்டும் | எதிர்பார்த்த பெறுபேற்றை அடையவில்லை. | கடந்த 06 மாதங்களாக கொவிட் 19 தாக்கத்தை எதிர் நோக்க வேண்டியேற்பட்டது. ஆகவே செயற்திடட வழிநடாத்தல் குழுக் கூட்டங்களை நடாத்த முடிவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்துரையின் பிரகாரம் செயற்திட்ட வழிநாடாத்தல் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பாய்வு ஆவணத்தின் 2 ஆம் இணைப்பினது 21 ஆம் பிரிவு | வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுக் கூறு செயற்திட்ட உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டும். | நலிவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை | முகாமைத்துவத்திடமிருந்து பதில் கிடைக்கவில்லை. | அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பொருட் கொள்வனவு வழிகாட்டல்கள் 04 ஆம் அத்தியாயம், 4.2 ஆம் பிரிவு | பொருட் கொள்வனவு வழிகாட்டலின் பிரகாரம் பொருட் கொள்வனவுத் திட்டமும் பொருட் கொள்வனவு கால அட்டவணையும் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்பார்த்த பெறுபேற்றை அடையவில்லை. | | பொருட் கொள்வனவுத் திட்டமும் கால அட்டவணையும் முற்றாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 3. பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட நடவடிக்கைகள் 04 உறுப்புகளைக் கொண்டிருந்தன. அவையாவன, கமத்தொழில் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும், கமத்தொழிலுக்கான நீர், செயற்த்திட்ட முகாமைத்துவம், எதிர்பாராத அவசரகால உதவி என்பனவாகும். 470,000 சிறுபற்றுநில விவசாயிகள் (375,000 ஹெக்டெயர்) ஆரம்ப செயற்திட்ட நலனாளிகளாக அமைவர். அவர்கள் இலங்கையின் வறண்ட பிரதேசங்களில் உள்ள 11 நிர்வாக மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகும். அவையாவன, வடமாகாணம் (கிளிநொச்சியும் முல்லைத்தீவும்), கிழக்கு மாகாணம் (திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை) வட மத்திய மாகாணம் (அநுராதபுரம் மற்றும் பொலநறுவை) வடமேற்கு (குருநாகலை மற்றும் புத்தளம்) , தென்மாகாணம் (ஹம்பாந்தோட்டை) , ஊவா மாகாணம் (மொனராகலை) என்பனவாகும். செயற்திட்டம் 6 ஆண்டிற்கும் அதிகமாக அமுலாகும். (2018-2024) கமத்தொழில் அமைச்சு தலைமைத்துவ செயற்திட்ட முகவராகும். மேற் குறிப்பிடப்பட்ட 4 உறுப்புகளினதும் முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதம்.

| | நடவடிக்கை | தாக்கம் | முகாமைத்தவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 டிசெம்பர் 24 ஆந் திகதியன்று அனுராதபுரத்தில் ரனோராவ குள புனரமைப்புச் செயதிட்டத்திற்கென ஒப்பந்தப் பொதி 01 மற்றும் பொதி 02 என்பவற்றின் கீழ் 02 பிரத்தியேக ஒப்பந்தகாரர்களும் ரூபா 8.52 மில்லியன் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 யூன் 22 வரை புனரமைப்பு வேலை ஆரம்பமாகவில்லை. | பௌதீக முன்னேற்றம் குறைவாக உள்ளதால் உடன்படிக்கைக் காலத்தினுள் ஒப்பந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய இயலாது. | கணக்காய்வு ஐய வினாவுடன் உடன்படுகின்றோம். | ஆரம்பம் மற்றும் வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பாய்வு ஆவணத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் நேரத்துக்கேற்ப மீளாய்வு செய்து செயற்திட்ட நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வதற்கென முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்று தாபிப்பதற்கு பேணப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2020 யூன் 22 வரை முகாமைத்துவ தகவல் முறைமையை தாபிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்பார்த்த பெறுபேற்றை அடையவில்லை. | TOR இற்கான MIS தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. MIS இற்காக CSIAP 2020 ஒக்தோபர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அமுல்ப்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். | தாமதமின்றி முகாமைத்துவ தகவல் முறைமை தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பெரும்போக ஆரம்பத்துடன் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்கும் நோக்குடன் ரூபா 65,502,182 கிரயத்தில் நான்கு மதியுரையாளர்கள் | செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் திருப்திகரமற்றதாக இருந்தது. | அவதானிப்புடன் இணங்குவதுடன் திட்டத் தயாரிப்பு தாமதத்திற்குப் பல காரணங்கள் உண்டு. சனாதிபதி தேர்தல், செயல் நடவடிக்கைத் திட்ட மாற்றம், மதியுரையாளர் | தாமதமின்றி காலநிலைக்கேற்ப துரித நீர்ப்பாசன கமத்தொழில் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| தெரிவு செய்யப்பட்டு 06 மாகாணங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் மகாண மட்டத்தில் காலநிலைக்கேற்ற துரித நீர்ப்பாசனத் திட்டத்தை தயாரிப்பதற்கு மதியுரை நிறுவனத்திற்கு ரூபா 42,033,122 முற்பணமாகவும் பகுதியளவிலான கொடுப்பனவாகவும் வழங்கப்பட்டிருந்தது. ஓராண்டு பூர்த்தியாகியும் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் திருப்திகரமற்ற மட்டத்திலேயே இருந்தது. மேற்படி, திட்ட தயாரிப்பில் ஏற்பட்ட தாமதமே இதற்கான காரணமாகும். மேலும், கால நிலைக்கேற்ப துரித நீர்ப்பாசன கமத்தொழில் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தெரிவான நான்கு மதியுரை நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட ரூபா 4,935,472 முற்பணக் கொடுப்பனவுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பொருட் கொள்வனவு வழிகாட்டலின் 6.6.4 ஆம் பிரிவின் பிரகாரம் மதியுரையாளர்களிடமிருந்து முற்பண உத்தரவாதம் பெறப்பட்டிருக்கவில்லை. | கோரிய இடத்தின் உள்ளவாறான பதியை குறிக்கும் வரைபடம் என்பன அவையாகும். | வேண்டும். |

## 3.2 மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்தவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நேரடித் மேற்பார்வையுடன் தேவையான பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள | செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமாகி சரியான மேற்பார்வை இல்லாது ஒப்பந்த வேலைகள் | நீர் வழங்கல் சிரேஷ்ட பொறியியலாளர் 2020 ஏப்ரலில் தமது பதவியிலிருந்து விலகியிருந்தார். மதியுரை | செயற்திட்டத்தின் முக்கிய பதவிக்கு ஆட்சேர்க்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நீர் முகாமைத்துவ சிரேஷ்ட பொறியியலாளர் பதவிக்கு செயற்திட்ட அலுவலகத்தால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாததால் செயற்திட்ட அலுவலகத்தால் அறிவுறுத்துரைகளையும் சரியான வழிகாட்டலையும் மேற்கொள்ள முடியவில்லை. | நடைபெறுகின்றன. | அடிப்படையில் பொறியியலாளரை நியமிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. | |
| (ஆ) | முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் மதவியணிக்கு ஆட்சேர்க்கும் வரை கமத்தொழில் அமைச்சின் தகைமைவாய்ந்த உத்தியோகத்தர்களின் மூலம் கடமைகளை நிறைவேற்றுமாறு அமப/18/1433/820/015 இலக்கமுடைய 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மாணத்தின்படி தகவல் வழங்கப்பட்டது. ஆகவே, வரிசை அமைச்சினதும் தொடர்புடைய மாகாண சபைகளினதும் 40 உத்தியோகத்தர்களை பகுதி நேர வேலை அடிப்படையிலும் 06 ஊழியர்களை நாட் சம்பள அடிப்படையிலும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2019 டிசெம்பர் 31 வரை ரூபா 8,267,863 ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்திற்கான நிரந்தர பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் 2018 செப்டெம்பர் 12 ஆந் திகதியன்றும் 2019 மார்ச் 18 ஆந் திகதியன்றும் பெறப்பட்டிருந்தன. | நலிவான மனிதவள முகாமைத்துவம். | அவதானிப்புடன் இணங்குகின்றோம். செயற்திட்டக் கிரயக் குறைப்பு அடிப்படையிலேயே நாம் பகுதி நேர வேலை ஊழியர்களை ஆட்சேர்த்தள்ளோம். | (அ) மாதத் தொடக்கத்தில் செயற்திட்டப் பணிப்பாளர் / பிரதி செயற்திட்டப் பணிப்பாளர்களால் பகுதி நேரப் பதவியணியினருக்கு வேலை நிரல் வழங்கப்பட வேண்டும்.<br><br>(ஆ) தொடர்புடைய மேற்பார்வை உத்தியோகத்கதர்கள் பகுதி நேரப் பதவியணியினரிடமிருந்து உள்ளவாறான வேலையின் விரிவான விபரத்தைப் பெற வேண்டும்.<br><br>(இ) செயற்திட்ட மேற்பார்வைக் கூறு (PMU) பகுதி நேர உத்தியோகத்தர்களின் வரவு இடாப்பை பேண வேண்டும்.<br><br>(ஈ) பிரதிச் செயற்திட்டப் பணிப்பாளர் (PMU) வெளியிட்ட MOA/CSIA/PMU/Admin எனும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆகவே, செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்ற வீழ்ச்சிக்கு நிரந்தர பதவியிணின் ஆட்சேர்க்கப்படாமை குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | | | இலக்கமுடைய 2019 செப்டெம்பர் 18 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் பகுதி நேர உத்தியோகத்தர்களது உள்ளவாறான கடமை நேரத்தின் அடிப்படையில் மாதாந்தப்படி வழங்கப்பட வேண்டும். |
| (இ) | ஆறு பொருட்கொள்வனவு வல்லுனர்கள் மீளாய்வாண்டின்போது ஆட் சேர்க்கப்பட்டிருந்தும் பொருட் கொள்வனவு தொடர்பாக போதிய வேலைகள் அவர்களுகக்கு வழங்கப்படவில்லை. | பொருட் கொள்வனவு வல்லுனர்களுக்கான செலவினம் பயனற்றது. | - | நியமனக் கடிதத்தின் பிரகாரம் பணியிலமர்த்தப்பட்ட சகல பொருட்கொள்வனவு வல்லுனர்களும் வினைத்திறனுடன் பணியாற்ற வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின்போது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 3 உறுப்புகளின் கீழ் ரூபா 520.5 மில்லியன் செலவழிக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்டபோதும், திறைசேரியின் வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபா 440 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ரூபா 440 மில்லியன் தொகையின் 58 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 256.5 மில்லியன் செயற்திட்டத்தின் உள்ளவாறான செலவினமாக அமைந்தது. குறைவான நிதிசார் முன்னேற்றத்திற்கான காரணங்களாவன, செயற்திட்டத்தின் நோக்கத்தை மொத்தக் காலப்பகுதியின்போது அமையக் கூடியவாறான | பயன்படுத்தப்படாத ஒதுக்கீட்டுக் கடப்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். திட்டத்தின் பிரகாரம் நிதிசார் முன்னேற்றத்தை அடைய முடியாது | அவதானிப்புடன் இணங்குகின்றோம். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதியைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உலர் பிரதேச அபிவிருத்தி திட்டம் (HSAADP) தயாரிக்கப்படாமையும் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமையுமே ஆகும். அத்தோடு, அங்கீகரிக்கப்பட்ட பதவியினியின் பிரகாம் முக்கிய பதவிகளுக்கான சிரேஷ்ட முகாமைத்துவப் பொறியியலாளர், நீர்வள அபிவிருத்தி வல்லுனர், பொருட் கொள்வனவு வல்லுனர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அபிவிருத்தி உத்தியோகத்தர், நிரந்தர அடிப்படையிலான முகாமைத்துவ உதவியாளர், ஆட்சேர்க்கப்படுவதில் நிலவிய தாமதம் காரணங்களாக அமைந்தன. | | | |
| (உ) | மீளாய்வாண்டின்போது செயற்திட்ட முகாமைத்துவக் கூறினதும் செயற்திட்டப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தினதும் 26 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், தற்போதைய பதவியில் 43 ஊழியர்கள் பகுதி நேர வேலையில் ஈடுபட்டுமிருந்தனர். | நலிவான மனித வள முகாமைத்துவம் | விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. கால கெதியில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். | செயற்திட்டம் சுமூகமாக நடைபெற மேலும் தாமதமின்றி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |